https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

சமணசமயத்தில் பெண் அவலங்கள்

முனைவர் த. மாதேஸ்வரி
தமிழ்த்துறை
வேளாளர் மகளிர் கல்லூரி, திண்டல், ஈரோடு-12

Abstract

Manimekalai is identified as a renaissance epic and an epic that gives rise to women. Even though it is an epic that promotes women, it can be seen from the literary scenes that many tragedies have taken place in the lives of the women of that time. "A woman is the enemy of a woman" says the feminist proverb. Many of the women's miseries in the twenty first century one also presents in the epic women's lives of the day. It is the need of the hour to make it come out. Inability of women to think for themselves, indecisiveness inability to move about in public despite being brave, exclusion of women from home due to immorality, exclusion of women from society due to immorality, lack of respect in society for a child born to an illegitimate woman , lack of respect in the society for a child born to an illegitimate woman, man wanting to be ignorant of it even if he is married woman, drunken criminal punishment given to women, punishments given to women in the constitution etc. This article with the help of Manimekalai.

Key Words: Manimekalai, Woman, Police, Epic woman.

ஆய்வுச் சுருக்கம்

பெண்களை முன்னிறுத்திய காப்பியங்களில் சிலம்பும், மணிமேகலையும் முன்னோடிகளாக உள்ளன. இதனை கருக்கொண்டு பெண்ணியச் சிந்தனைகளைப் பலவாறாக ஆய்ந்துள்ளனர். இருப்பினும் பெண்களுக்குரிய அவலங்களைத் தனியே பகுத்துக் காண்பது பெண்களின் மதிப்பை மேம்படுத்தும். குறிப்பாகப் புரட்சிக் காப்பியமாகவும், சமயக் காப்பியமாகவும் அடையாளப்படுத்தப்படும் மேகலையில் பெண்கள் அடைந்துள்ள அவலங்களை இனங்காட்டுவது அவர்தம் வரலாற்றிற்குப் பெரிதும் பங்களிப்புச் செய்யும்.

முன்னுரை

சிலம்பின் தொடர்ச்சியாகக் கருதப்படுவது "மணிமேகலை காப்பியத் தலைவியான மணிமேகலையின் பெயராலேயே சார்த்தி வழங்கப்படுகிறது"[1]. பல சமயக் கருத்துகள் இருப்பினும் இதில் அமைந்துள்ள சமயம், பௌத்தம் பெண்ணிற்கு ஏற்றம் கொடுப்பதாகப் பல புரட்சிச் சிந்தனைகளை, அறக் கருத்துக்களை, கல்வியை முன்னெடுப்பதாக, சமூகத்தின் அவலங்களாகக் கருதப்படும். திருட்டு, பொய், ஒழுக்கச் சீர்கேடு, பசி, பிணி போன்றவற்றைத் தனியொரு பெண்ணால் சீரமைப்பதாக பெண்கல்வியை ஆதரித்து அதன் வயப்பட்ட தலைமைப் பண்பை நிறுவுவதாக பெண் இல்லறத்தின் வழிபட்ட கற்புநிலையில் குற்றமில்லாதவளாக அமைந்திருக்கின்றது மணிமேகலை. மணிமேகலைக்குப் பழங்காலத்தில் "மணிமேகலைத் துறவு" [2] என்ற பெயரும் உண்டு.

பெண்ணியம் என்பதற்குப் பல வரையறைகள் இருந்தாலும் அனைத்து நிலையிலும் பெண்களுக்கான சம உரிமைகள் என்பதே பொதுவான கருத்தாகும். பெண்ணியத்திற்கு உலகிலுள்ள அனைத்துச் சமூகங்களுக்கும் பொருந்தும் படியான மூன்று காலத்திற்கும் உரிய ஓர் விளக்கத்தைக் கொடுப்பதென்பது இயலாத ஒன்றாகும். பெண்ணிம் என்பது பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டும் என்று கேட்கவில்லை. எல்லா சாராரும் சமத்துவம் பெற்ற சமூகம் உருவாக வேண்டும் என்பதே பெண்ணியத்தின் அணுகு முறை யாகும். ஆணும், பெண்ணும் பாலினப் பாகுபாடுகள் இன்றி மனிதர்களாக மதிக்கப் படுதல் வேண்டும் என்பதே அதன் கோரிக்கையாகும்.

மணிமேகலையில் பெண்நிலைக் கருத்தியல்கள்

மணிமேகலை, சுதமதி, மாதவி, சித்ராபதி, சாவி, ஆதிரை, காயசண்டிகை, மருதி, விசாகை, கோதமை போன்ற பெண்மாந்தர் கள் முற்போக்குச் சிந்தனை கொண்டவர் களாக இருந்தனர். சமூக முன்னேற்றத்திற்கும் பெண் ஏற்றத்திற்கும் பல கருத்துகள் இருந்த பொழுதிலும் பெண்ணிய நோக்குடனும் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள பல அவலங் களை வெளிக்கொணரும் நோக்கத்துடனும் கருத்துகளை அணுக வேண்டியுள்ளது.

பெண் சுயமுடிவில்லாமை

"பெண்கள் தங்கள் வாழ்க்கைக்கான உறுதியான முடிவைத் தானே எடுப்பதை மணிமேகலையில் அருகியேயுள்ளது."[3] சுதமதி, மணிமேகலை, மருதி, காயசண்டிகை, ஆதிரை போன்றோரை உதராணமாகக் கூறலாம். மணிமேகலை, பலஇடங்களில் தன்னிச்சை யான முடிவுகளை எடுத்திருப்பினும், பிறரின் கருத்தோடு ஒன்றியே முடிவெடுக்கும் நிலையைக் காண முடிகிறது.

"மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழில் படாஅள்
ஆங்ஙனம் அன்றியும் ஆய் இழை கேளாய்
ஈங்கு இம் மாதவர் உறவிடம் புகுந்தேன்"

"மணிமேகலையின் விருப்பம் பெறாமலேயே அவளைப் புத்த மதத்தில் இணைத்துத் துறவி யாக்கும் எண்ணம் மாதவியால் ஈடேற்றப் படுகின்றது"[4]. உதய குமாரனின் மேல் காதல் கொள்ளும் எண்ணம் தடைபடுகிறது. இருப்பினும் இவள் பிக்குணக் கோலங் கொண்டதை விடுத்து உதயகுமாரன்பால் உள்ளத்தைச் செலுத்துகிறாள்.

பெண்கள் தனியே செல்ல இயலாத நிலை

பெண்கள் தன்னந்தனியாக யாதொரு துணையுமில்லாமல் வெளியே செல்ல முடியாத நிலையைக் காப்பியத்தில் பல இடங்களில் காண முடிகின்றது. காப்பியத் தொடக்கத்தில் சுதமதியின் வாழ்க்கை முதல் விசாகையின் வாழ்க்கை வரை இதனைக் காணலாம். சுதமதி, சண்பை நகரத்துக் கௌசின் என்பானின் மகள். இவள் துணிச்சல் மிகுந்தவள். யாதொரு துணையு மில்லாமல் முன்பின் பழக்கமில்லாதச் சோலையொன்றில் பூப்பறித்துக் கொண்டி ருந்தாள். அவ்வழியே வான்வழியில் இந்திர விழாவைக் காண வந்த "மாருதவேகன்" என்ற வித்தைகள் கற்ற ஒருவன் அவளைத் தன்வயமாக்கிச் சிலநாள் கழித்துப் புகார் நகரத்தின் கண் விட்டுச் செல்கிறான். தன் வாழ்க்கையில் நடந்த அனுபவத்தை எடுத்துக் காட்டி, இதனால் மணிமேகலையும் இத் துன்பத்திற்கு ஆளாக நேரிடும் என உணர்த்து கிறாள். ஆதலால் அவளைத் தனியே விடுவது நலம் பயக்காது என உரைக்கி ன்றாள்.

இல்லம், சமூகத்திலிருந்து புறக்கணிப்பு

சுதமதி அந்தண குலத்தைச் சார்ந்தவள். இவளைக் கணாக் காரணத்தால் இவளின் தந்தை கௌசிகன் பெரிதும் வருத்தமுற்றுக் கன்னியாகுமாரிக்கு நீராடச் செல்வோருடன் இணைந்து பல இடங்களில் தேடுகின்றான். பின்பு புகார் நகரில் இவளைக் கண்டவுடன் நிலையறிந்து, இவள் இனிமேல் அந்தணர் களோடு இணைந்திருக்க தகுதியற்றவள் என்று உணருகிறான். மகள் மீதுள்ள பற்றின் காரணமாக யாதொரு தொடர்புமில்லா புகார் நகரத்தில் மனை தோறும் பிச்சை யெடுக்கத் தந்தையும் மகளும் உண்டு தனித் திருக்கின்றனர். இந்நிலையில் பசுவொன்று கௌசிகனின் வயிற்றைக் குத்திக் கிழித்து விட மருத்துவச் சிகிச்சைக்காகவும் உயிரைக்

காப்பாற்றும் படியும் பலரையும் நாடுகிறாள் சுதமதி. அதிலும் முன்னரே தெரிந்திருந்த சமண முனிவரை நேர்ந்துள்ள ஆபத்தைப் போக்குமாறு வேண்டுகிறாள். ஆனால், அவள் ”மாருத வேகனோடு” சென்றிருந்ததை அறிந்திருந்ததனால் அவனுக்கு உதவ மறுக்கிறான். பின்னர் முன்பின் அறிந்திரா ”சங்கத் தருமன்” என்னும் பௌத்த துறவியே மருத்துவமளித்து அவளைக் காக்கின்றான். இது ஒழுக்கச் சீர்கேடு அடைந்த பெண்களை சமூகத்திலிருந்தும், இல்லத்தி லிருந்தும் புறக்கணிப்பதையே காட்டுகின்றது.

ஒழுக்கத் தவறால் விளையும் சமூக மதிப்புக் குறைவு

பெண்கள் ஏதேனும் ஒரு காரணம் பற்றிச் சில ஒழுக்கத் தவறுகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர். இத்தவறான கூடுகையினால் அப்பெண்ணும், பிறக்கும் குழந்தையும் உயிரிழப்பு வரையில் செல்வதுண்டு. அந்த இறப்பையும் தாண்டி வளரும் தருணத்தில் இருவருமே சமூகத்தில் பெரும் இன்னலை அடைகின்றனர். கூடுதலாக சமூகத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பும் குறைகிறது. இதற்குச் சாலி – ஆபுத்திரன் கிளைக்கதை தக்க சான்றாகும்.

“அபஞ்சிகன்“ என்னும் அந்தணனின் மனைவி சாலி. இவள் முறை தவறிய ஒழுக்கத்தால் சூல்கொள்கிறாள். அதையும் பொருட் படுத்தாது, அவ்வொழுக்கக் கேட்டால் விளைந்த பாவத்தைப் போக்கிடத் தென்திசை யில் உள்ள குமரிக் கடலில் நீராட வருகின்றாள். வழியிடையே குழந்தையையும் பெற்றெடுக்கிறாள். அதைப் பராமரிக்கவும் இயலாமல், வளர்க்கவும் முடியாமல் சமூகத்திற்காக அஞ்சி அருகிலிருக்கும் தோட்டத்தில் இட்டுச் செல்கிறாள். அந்தக் குழந்தையை பசுவொன்று பாதுகாப்பதை அறிந்த “பூதி“ எனும் அந்தணன் ஆபுத்திரன் எனப் பெயரிட்டு வளர்க்கிறான்.

முறை தவறிய ஒழுக்கத்தால் பிறப்பினும் உயர்ந்த சிந்தனைகளோடு ஆபுத்திரன் காணப்படுகிறான். அவ்வூரின் அந்தணர் வீடொன்றில் பசுவை வேள்வியிடுவதை அறிந்து பிறரறியா வண்ணம் இரவோடு இரவாக அந்த பசுவை மீட்கிறான். இச் செய்தியறிந்த அந்தணர் அவனைப் பின் தொடர்ந்து தாக்குகின்றனர். பின்னடக்கும் உரையாடலில் இருதரப்பினருக்கும் இடையே கருத்து மோதல் ஏற்படுகின்றது. ஆபுத்திரனோ “தானாக வளர்ந்த புல்லை மேய்ந்து தனக்கும் பிறர்க்கும் பால் கொடுத்து உயிர்காக்கின்ற இப்பசு எந்தவொரு குற்றமும் இல்லாதது. பால் தருவதைத் தவிர வேறொரு குற்றமும் தீங்கும் விளைவிக்கா இப்பசுவை வேள்வித் தீயில் தள்ளுவது முறையன்று“ என உயிர்க்கொலை குறித்து இரக்கப்படுகின்றான். ஆனால், எதிர்தரப்பின் வாயிலாக இவனின் பிறப்பும், குடிவழியும் கேலி செய்யப்படுகின்றது.

ஆபுத்திரன் பிறந்தவுடன் தன் தாயால் தனித்து விடப்பட்டவன். பின் ஆவால் வளர்க்கப்பட்டவன். ஆதலால் ஆமகன் சிறியவன், புலையன் என இகழப் படுகின்றான். பிறப்பில் அந்தணனாகவும், வளர்ப்பில் அந்தணனாகவும் இருந்த போழ்திலும் தொடுதலில் இருந்தும் விலக்கப் படுகின்றான்.

பிற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது என்ற உயரிய சிந்தனை கொண்டிருந்தாலும், அவனின் பிறப்பைக் காரணங்காட்டி சமூகத்திலிருந்து ஒதுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். பின்னாளில் தன் குலத்தில் இருந்தே புறக்கணிக்கப் படுகின்றான்.

பெண்களுக்கான குடிகுற்றத் தண்டனை

முடியாட்சியாலும் தனிமனித ஒழுக்கம், தனிமனித அறம், தனிமனித சமூக ஒத்திசைவு போன்றவை பெரிதும் விரும்பப் பட்டன. தொழில் வழிப்பட்ட குலங்கள் நடைமுறையிலிருந்தன. மணிமேகலை வளர்ப்பால் புத்த துறவியானாலும் பிறப்பால் நாபாக் கணிக்கைக் குலம் மணிமேகலையின் தாயார் மாதவியும், பாட்டி சித்ராபதியும் கணிகைக் குடிவழியே, மாதவி, மாபெரும் பத்தினிமகள் மணி மேகலை தவ்வழியில் செல்லாள் என்று தவநெறி ஆற்றுப்படுத்துகின்றாள். ஆனால், சித்ராபதியோ மணிமேகலையின் தவவேடம் நகைப்பிற்குண்டானது. குலத்திற்கு இழி வானது என்று எடுத்துரைக்கின்றாள். நாடகக் கணிகையர்க்குத் துறவறம் ஏற்புடைய தன்று என்றும் சில வழக்கிற்கு ஒத்ததன்று

மாறானது“ என்றும் தன் பக்கத்து நியாயங்கள் விளக்குகின்றாள்.

**“ஒளிஎனிப் புகூஉம் முதுகுழப் பிறந்த
பத்தினிப் பெண்புர் அல்லேல் பலர்தம்
கைத்தூண் வாழ்க்கைக் கடலியம் அன்றே
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மை இல்
யாழ்இனம் போலும் இயல்பினம் அன்றியும்
நறுந்தாது உண்டு நயன்இல் காலை
வறும்த் துறக்கும் வண்டு போல் குவம்”**

எனத் தன் குலத்திற்குண்டான இயல்புகளை எடுத்துரைத்து மணிமேகலையை அதன்படி மாற்றுவேன். அவ்வாறு சொல்லியபடிச் செய்யவில்லையாயின் குடிக்குற்றப் நாடகக் கணிகையர் வீட்டிற்குச் செல்லாமல் முடங்குவேன் எனச் சூளுரைக்கின்றாள்.

குறிப்பிட்ட குடியில் இருக்கும் ஒருவராய் இழுக்கு நேர்ந்துவிட்டால் அல்லது கூறியதைக் கூறியவாறு நடத்திக்காட்ட முடியாத நிலையில் போனால், அதன் வாயிலாக் குடிக்கு இழுக்கு நேர்ந்தால் ”குடிக்குக் குற்றம் நேர்ந்தால் ஏழு செங்கலைத் தலைமேல் சுமந்து நாடக அரங்கைச் சுற்றி வரவேண்டும். வந்தபின் அவர்கள் நாடகக் கணிகையர்களின் வீடுகளுக்கோ, நாடக அரங்கிற்கோ செல்லுதல் கூடாது பழியை மட்டும் சுமந்துகொண்டு தனித்திருக்க வேண்டும். பிறரால் புழங்க கப்பட்டாமல் தனித்து விடப்படுவர். அத்தகையத் தண்டனையைச் சித்ராபதி தனக்குத்தானே விதித்துக் கொள்வதாகக் காப்பியத்தில் இடம் பெறுகிறது. இந்தச் செயல்களினால் நாடகக் கணிகையர் தொழில் முறையிலும், குல முறையிலும் தனித்து விடப்படுவதால் அவர்களின் உணவு ஆதாரங்கள் கேள்விக் குறியாகும். உடல் நல்ல நிலையில் இருந்தாலும், இரந்து பிச்சையேற்றுண்ணும் நிலைக்குத் தள்ளப்படுவர். மேலோட்டமான கண்ணோட்டத்தில் பார்த்தால் எளிமையான தண்டனை போன்று தோன்றினாலும் சமூகத்தின் பொதுவெளிக்குத் தள்ளப்படும் போது அவள் விருப்பப்பட்டோ, விருப்பப் படாமலோ பாலியல் தொழிலாளியாக மாறுகின்றாள் அல்லது மாற்றப்படுகின்றாள்.

அரசவையில் பெண் தண்டனைகள்

நிலையான எழுதப்படாத சட்டங்கள் பல நிறைந்ததே மன்னராட்சி அமைப்பு மணி மேகலையும் அக்கால வழக்கியலையும், வாழ்வியலையும் பிரதிபலிக்கின்றது. அவளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளும் அத்தகையதே காயசண்டிகையும் பின் தொடர்கிறாள் என தவறாக எண்ணி அவளின் கணவன் காஞ்சனன், பின் தொடர்ந்து மணிமேகலையின் காதலன் உதயகுமரனைக் கொலை செய்கிறான். அரசனோ காஞ்சனன் குற்றமற்றவன் என்றும் கொலை நிகழ முதற்க் காரணியான மணிமேகலையைச் சிறைப்படுத்த வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், அரசி அரசனிடம் முறையிட்டு மணி மேகலைக்குச் சிறைத் தகுதியானது இல்லை என வாதம் செய்து விடுவிக்கின்றாள். ஆனால் உண்மையில் அவளின் வஞ்சக எண்ணம் பொதுவெளி மக்களால் அடித்துத் துன்புறுத்தி உயிர்போகச் செய்வதாகும்.

- ஊரார் அடித்துக் கொள்ளும் படி பித்துடையவள் ஆக்குதல்.
- மணிமேகலை என்ன விரும்பினால் என அறிவியலால் கூற வைத்தல்.
- போலி நோயைக் காரணம் காட்டி உணவிடாமல் இறக்கச் செய்தல்.

இம்மூன்று தண்டனைகளுமே ஒரு பெண்ணால் ஒரு துறவிக்கு வழங்கப்பட்டது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். என்று மணிமேகலைக்கு மயக்க மருந்து கொடுத்து அவளுடைய அறிவைப் பித்துடையவளாக்க முனைகிறாள் அரசமா தேவி. காரணம் இவ்வூரில் இருப்போர் அனைவரும் மணிமேகலையைப் ”பித்துடையவள் என்றுரைத்து அடித்துத் துன்புறுத்த வேண்டும் என்பதே. ஆனால், அவளோ மறுபிறப்பு உணர்ந்திருந்த காரணத்தினால் அறிவு வேறுபாடின்றி நடுவுநிலை திரியாமல் நின்றாள்”[5]

மானக்கேடு கொள்ளச் செய்தல்

மேற்கண்ட மருந்து முறையினால், மணிமேகலை எதுவும் செய்ய முடியாதக் காரணத்தினால் மனிதர்களின் உதவியை நாடுகிறாள், இராசமாதேவி. ஆகையினால் , மணிமேகலையின் பிக்குணித் தோற்றத்தை

வேறுபடுத்தி அழகுடையவளாக்கி "மணிமேகலை என்னை விரும்பினாள்" என அறிவிலி ஒருவனைக் கூறச் செய்கின்றாள். அறிவிலிக்குப் பொற்காசுகள் நிரம்பக் கொடுத்து அவளைத் தன்சொற்படி நடக்க வைக்கின்றாள். அவனோ, பலரிடமும் மணிமேகலை என்னை மயக்கினாள் என்று கூறி அந்தப்புரத்தில் தனியே விடப்பட்டிருக்கும் மணிமேகலையைக் காணச் செல்கிறான்.

பொய்நோய் கூறல் – பட்டினியிடல்

காப்பியம் முழுவதும் அறத்தின் வடிவமாகவும், பிறருக்குப் பசி என்னும் நோயைப் போக்கிய அருமருந்தாகவும் திகழ்ந்தவள், மணிமேகலை. "யானைத் தீ" எனும் பெரும்பசி நோய்க்கு ஆடப்பட்டவரையும், பல்வகை மனிதர்களின் பசியையும் போக்கியவள்" ஆனால் இறுதியில் அவளும் "பசி" என்ற நோயின் கொடிய தன்மைக்கு ஆட்படுத்தப்படுகின்றாள். முதலில் மணிமேகலையை இழிவாக்கிட மருந்து உத்தியையும், பின், "அறிவிலி மனிதன்" உத்தியையும் பயன்படுத்திட்ட அரசி இறுதியாக அவளின் உயிரைப் பறிக்கத் துணிகிறாள்.

"மகனை நோய் செய்தாளை வைப்பது என்னன்று
உய்யா நோயின் ஊண் ஒழிந்தாள் என
பொய்நோய் காட்டி புழுக்றை அடைப்ப
ஊண்ஒழி மந்திரம் உடைமையின் அந்த
வாள்நுதல் மேனி வருந்தாது இருப்ப"

நோய் மிகுதியின் காரணமாக இவளுக்கு உணவு வயிற்றுக்குள் செல்லவில்லை என அரசமாதேவி போலியான பொய்ந்நோயைக் காரணம் காட்டுகின்றாள். ஆகையால், அவளுக்கு உணவளிக்காமல் தனியறையில் அடைக்கின்றாள். அவளோ ஊண்தவிர்க்கும் மந்திரத்தை உரைத்து உயிர்க்காத்திருக்கிறாள். எவ்வகையிலும் மணிமேகலையை வெல்ல முடியாததால் அவளின் மேன்மைகளை எண்ணி அரசமாதேவி மனம் மாறுகின்றாள்.

"கல்வியிலும், சமய தருக்கங்களிலும், சமூக மதிப்பிலும் உயர்ந்து விளங்கக் கூடியவளுக்கே இத்தகைய இன்னல்கள் நடைபெற்ற போது சமூகத்தின் விளிம்பில் இருக்கும் பெண்களுக்கு நடந்திருக்கும் அவலங்கள் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது"[6].

முடிவுரை

காப்பியமைப்பில் பல பெண் மாந்தர்கள் வந்தாலும் கூடப் பெண்நிலைக் கருத்தியல் களை வெளிப்படுத்துவதில் மணிமேகலை குறிப்பிடத்தக்கவர். தனக்கான வாழ்க்கையை விருப்பு வெறுப்புகளைத் தானே அறுதியிட முடியாப் பெண்ணாக மணிமேகலை காட்சிப்படுகின்றாள். தன் தாயின் முடிவையே பின்பற்றுகின்றாள். மனம் உதயகுமரன் மேல் சென்றாலும் தன் புற வாழ்வியல் இடம் கொடுக்காது என உள்ளப் பிதற்றல் கொண்டவளாகத் தொடக்கத்தில் காணப்படுகிறாள்.

"பெண்ணே பெண்ணுக்கு முதல் எதிரி" என்பது பெண்ணியப் பழமொழி. அதற்குச் சான்று பகரும் வண்ணம் சித்ராபதி, அரசமாதேவியின் பெண் அவளது செயல் பாடுகள் அமைந்துள்ளன. பொது வெளியில் பெண்கள் தனித்து நடமாட முடியாது என்பதை சுதமதிக்கு நடந்த அவலங்கள் கொண்டு அறிய முடிகிறது. இஃது இன்று வரையிலும் வேறு ஏதேனும் வழியில் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

அடிக்குறிப்பு

1. U.Ve. சாமிநாதையர் (2013) மணிமேகலை, சாமிநாதர் நூல் நிலையம், சென்னை இந்தியா.
2. S. முத்துச் சிதம்பரம் (2005), பெண்ணியத்தின் தோற்றமும், வளர்ச்சியும், முத்து பதிப்பகம், திருநெல்வேலி, இந்தியா.
3. ஐம்பெருங்காப்பியங்கள், நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உ.ஆ.இளங்கனி பதிப்பகம், சென்னை.
4. மணிமேகலை, புலியுர் கேசிகன்.
5. க.ப.அறவாணன், தமிழ் மக்கள் வரலாறு தமிழ்த்தோட்டம், சென்னை.
6. சாத்தனார், தமிழ்கலைப் பதிப்பகம், சென்னை – 30
7. முனைவர் மு. பழனியப்பன், பெண்ணிய வாசிப்பில் மணிமேகலை, புதுக்கோட்டை.